©
GOVERNMENT OF TAMIL NADU
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 22] CHENNAI, WEDNESDAY, JANUARY 30, 2013
Thai 17, Nandhana, Thiruvalluvar Aandu–2044

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், திண்டுக்கல்**

**திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியம் கட்டக்காமன்பட்டி ஊராட்சி மன்றத் தலைவரை பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க.எண் 1429/2012/அ3(1).]*

**No. VI(2)/23(a-1)/2013.**

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியம் கட்டக்காமன்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. ப. காந்தி என்பவர் விதிமுறைகளுக்கு முரணாக செயல்பட்டு, ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியதன் பேரில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (1994 ஆம் ஆண்டின் 21–வது சட்டம்) பிரிவு 205 உட்பிரிவு (11)–ல் மாவட்ட ஆட்சித்தலைவர்/ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியம் கட்டக்காமன்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் திரு. ப. காந்தி என்பவரை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205–ன் கீழ் வரையறுக்கப்பட்ட நடைமுறைகளை வழுவாது பின்பற்றி கட்டக்காமன்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் பதவியிலிருந்து 2013–ம் ஆண்டு ஜனவரி 28–ம் தேதி முதல் நீக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியம் கட்டக்காமன்பட்டி ஊராட்சி மன்றத் துணைத் தலைவரை பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க.எண் 1429/2012/அ3(2).]*

**No. VI(2)/23(a-2)/2013.**

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியம் கட்டக்காமன்பட்டி ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திருமதி பா. மகேஸ்வரி என்பவர் விதிமுறைகளுக்கு முரணாக செயல்பட்டு, ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியதன் பேரில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (1994 ஆம் ஆண்டின் 21–வது சட்டம்) பிரிவு 206–ல் சொல்லப்பட்டுள்ள உட்பிரிவு (11)–ல் மாவட்ட ஆட்சித்தலைவர்/ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியம் கட்டக்காமன்பட்டி ஊராட்சி மன்றத்துணைத்தலைவர் திருமதி பா. மகேஸ்வரி என்பவரை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 206–ன் கீழ் வரையறுக்கப்பட்ட நடைமுறைகளை வழுவாது பின்பற்றி கட்டக்காமன்பட்டி ஊராட்சி மன்றத்துணைத்தலைவர் பதவியிலிருந்து 2013–ம் ஆண்டு ஜனவரி 28–ம் தேதி முதல் நீக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ந. வெங்கடாசலம்,** இ.ஆ.ப.,
*மாவட்ட ஆட்சித் தலைவர்/*
*ஊராட்சிகளின் ஆய்வாளர், திண்டுக்கல்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU

DTP—VI-2 Ex. (22)